Regd with the Registrar of Newspaper for India No. **TN TAM/2007/22101**
Regd. **TN/CC(S)Dn/326/13-15** Date of Publication 25th of Every Month

# GIFTS *of the* Holy Spirit

2014

**மதுரை இயேசு நம்மோடு சபையில் நடைபெற்ற பரிசுத்த ஆவியின் வல்லமை பயிற்சி முகாமில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தந்தை S. J. பெர்க்மான்ஸ் அவர்களின் பாடல் ஆராதனை**







**வல்லமை பயிற்சி முகாமில் கலந்து கொண்ட சபை விசுவாசிகள்**

Owned and Published by: **S. Paulraj Kennedy** from A-1, Deju Plaza, No:2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Ph: +91-44-22353500. Printed by **Jolly Peter** at **Sharp Offset Printers.** New no: 96, Old no: 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Ph: +91-44-28480607. Editor: **Nija Kennedy.**

Vol. 7 | மே 2014 | Issue 8 ரூ.20



# ஒளி எக்காளம்

Vol. 7 | மே 2014 | Issue 8

ஆசிரியர்:
**நிஜா கென்னடி**

வடிவமைப்பு
பால்@விங்ஸ்
+91-98411 81115

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்த பத்திரிகை வேண்டுவோர்
சந்தா அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா **ரூ. 200/**
வெளிநாட்டு வருட சந்தா **ரூ. 2000/**

**S. PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு
DD/M.O/Cheque மூலம் அனுப்பவும்.
உங்களது முழுமுகவரியையும் எழுதுங்கள்.
**ICICI** வங்கி வாயிலாகவும்
நீங்கள் அனுப்பலாம்.

**ICICI** வங்கி கணக்கின் பெயர்:
**S. PAULRAJ KENNEDY**
**ICICI** வங்கி கணக்கு எண்:
**0350 0150 7744**
IFSC No: ICIC0000350

தொடர்புக்கு

## KENNEDY MINISTRIES

**எஸ் பால்ராஜ் கென்னடி**
ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ
ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை
சென்னை - 600 015.
தமிழ்நாடு, இந்தியா.
Ph: +91-44-2235 3500
Mobile: +91-9940667881
email: nijakennedy@yahoo.com

WWW.KENNEDYMINISTRIES.ORG

## பெண்கள் உபவாசக் கூட்டம்



**வாரந்தோறும் - வெள்ளிக்கிழமைகளில்**

**காலை 11.00 மணி முதல்
1.00 மணி வரை**


இடம்: ஏ-4, டேஜு பிளாசா
2, தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி
சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
(சைதாப்பேட்டை கோர்ட் அருகில்)

**சகோதரிகள் கலந்துகொள்ளுங்கள்**

## சகோதரரே எங்களுக்காய் வேண்டிக்கொள்ளுங்கள்!

- ஒளி எக்காளம் பத்திரிகை, வேத ஆராய்ச்சி கூட்டங்கள், விடுதலை ஊழியங்கள் மற்றும் அனைத்து ஊழியங்களிலும் கிருபை பெருக, பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, அபிஷேகம் அளவில்லாமல் ஊற்றப்பட...
- அனைத்துக் கூட்டங்களிலும் இயேசு கிறிஸ்துவின் மனதுருக்கம் வெளிப்பட்டு, திரள் கூட்டம் அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள...
- பிணியாளிகள் குணமாக, ஏராளமான அற்புதங்களினால் கர்த்தருடைய வார்த்தை உறுதிப்பட...
- பிசாசின் வல்லமை கட்டப்பட, அந்தகார சக்திகள் முறியடிக்கப்பட, கட்டுகள் அறுக்கப்பட...
- சகோதரருக்கும், குடும்பத்தினருக்கும் தேவனுடைய பாதுகாப்பும், பரிபூரண ஆரோக்கியமும், தெய்வீக ஞானமும் உண்டாக....
- பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட....
- கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் தேவநாம மகிமைக்காக இவ்வூழியங்களில் பரிபூரணமாய் நிறைவேற...

# மதுரையில்
## வல்லமை பயிற்சி முகாம் - 7வது அணி



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!

கடந்த ஏப்ரல் மாதம் 18, 19, 20 ஆகிய தேதிகளில் மதுரையில், திண்டுக்கல் பைபாஸ் சாலையிலுள்ள 'இயேசு நம்மோடு' சபையில், பரிசுத்த ஆவியின் வரங்கள் குறித்ததான வல்லமை பயிற்சி முகாம், கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நடந்தது. சுமார் 80 பேர் கலந்து கொண்டனர். கடுமையான வெயிலையும், உஷ்ணத்தையும் தாண்டி வந்து, ஜனங்கள் கலந்து கொண்டது பரிசுத்த ஆவியானவரின் அநுக்கிரகமே.

போதகர் L. B. ஸ்டீபன் எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தார். சபை விசுவாசிகள், போதகருக்கு மிகுந்த உதவியாய் இருந்தார்கள். சகோதரர்கள் சாலொமோன் மற்றும் ஜான் உறுதுணையாய் இருந்தார்கள். இதற்கான பலன் இவர்களுக்கு பரலோகத்தில் பெருகும்படி நான் கர்த்தரை வேண்டிக்கொள்கிறேன்.

பரிசுத்த ஆவியின் வரங்களை எளிமையாக, விரிவாகக் கற்றுக்கொடுக்கக் கர்த்தர் எனக்கு உதவி செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாகட்டும்.

முகாமின் கடைசி நாளன்று தந்தை S. J. பெர்க்மான்ஸ் அவர்கள் கலந்து கொண்டு, வரங்களின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசி ஜனங்களை உற்சாகப்படுத்தினார். விசுவாசிகள், ஊழியக்காரர்களாக வேண்டுமென்று வலியுறுத்தினார். பரலோகத்திற்கு ஆத்துமாக்களைக் கொண்டுபோக, வரங்கள் மிகவும் உதவியாக இருக்கும் என்றார். இயேசு கிறிஸ்து ஆண்டவர் என்றும், அவர் இன்றைக்கும் ஜீவிக்கிறார் என்று நிரூபிக்கவும் வரங்கள் அவசியம் என்றார். முகாமின் முடிவிலே ஆராதனையோடு கூடிய ஜெபத்தை ஏறெடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

பரிசுத்த ஆவியின் வரங்கள் குறித்ததான போதனைகளை ஜனங்கள் மிகுந்த ஆர்வத்துடன் கேட்கிறார்கள். பல மணி நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து மிகுந்த ஈடுபாட்டுடன் கவனிக்கிறார்கள். கர்த்தருடைய கரத்தை இதில் பார்க்கிறேன். இது எல்லா தேவனுடைய பிள்ளைகளுக்கும் செல்ல வேண்டும். அதற்காக உங்களை ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மகிமை நம் இயேசு ராஜாவிற்கே!

கிறிஸ்துவுக்குள் அன்புடன்

Paulraj Kennedy



# தேவ பிரசன்னம்

கர்த்தரை எப்பொழுதும்
**எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்;**
அவர் என் **வலதுபரிசத்தில் இருக்கிறபடியால்**
**நான் அசைக்கப்படுவதில்லை**
(சங்கீதம் 16:8).

தாவீது கர்த்தரை தொடர்ந்து தனக்கு முன்பாக வைத்திருந்தார். அதனால் தான் கர்த்தர் எனது வலது பரிசத்தில் இருக்கிறார். அவருடைய பிரசன்னமும், ஆதரவும் தொடர்ந்து எனக்கு கிடைக்கிறது நான் அசைக்கப்படுவதில்லை என்று சொல்லுகிறார். என் இதயமும், ஆத்துமாவும் மகிழும். உடலும் இளைப்பாறி பாதுகாப்பாயிருக்கும் என்கிறார். கர்த்தர் நம்மை சூழ்ந்து இருக்கும்போது நமக்கு விசேஷித்த பாதுகாப்பு, ஆலோசனை கிடைக்கும். கர்த்தர் என் வலதுபுறத்தில் இருப்பதால் நிச்சயமாய் அவரை விட்டு விலகமாட்டேன் என்று தாவீது கூறுகிறார்.

இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு விசுவாசிக்கும் விசேஷித்த பாதுகாப்பு உண்டு. கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது என்ற வார்த்தையின்படி, அவர்கள் கர்த்தரை நம்பி தைரியமாய் எல்லாக் காரியங்களையும் செய்வார்கள். கர்த்தருடைய பார்வையில், எது சரியாக இருக்கிறதோ அதையே செய்வார்கள். கர்த்தரை நம்பி ஜீவிக்கும்போது, அவருடைய கிருபையும், இரக்கமும் சூழ்ந்து கொள்ளும்.

■ சகோதரி நிஜா கென்னடி




நம்முடைய வாழ்க்கையில் துன்பங்கள், மனவேதனைகள், ஆபத்துக்கள், தோல்விகள் நேரிடலாம். கர்த்தரை தேடுகிறவர்கள் வாழ்க்கையில் என்ன நேரிட்டாலும் நம்பிக்கையோடே தைரியமாக முன்னேறிச் செல்வார்கள். வாழ்க்கையைக் குறித்த தெளிவான குறிப்பிட்ட நோக்கத்துடன் இருப்பார்கள். கர்த்தரை விட்டு வழிவிலகிப் போக மாட்டார்கள். கர்த்தர் தங்களை ஒரு நோக்கத்தோடு தெரிந்தெடுத்திருக்கிறார்; அந்த நோக்கம் நிறைவேற முன்னேறிச் செல்வார்கள். எத்தனை இடறல்கள், பாவ சோதனைகள், கலக்கங்கள் வந்தாலும் கர்த்தர் தங்களோடு இருப்பதை உணர்ந்து, கர்த்தருக்கும் தங்களுக்கும் உள்ள உறவில் நிலைத்திருப்பார்கள். உலகத்தின் மாயைகளுக்கும், கவர்ச்சிகளுக்கும், இச்சைகளுக்கும் விலக்கி தங்களை காத்துக்கொள்வார்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தரோடுகூட உள்ள உறவில் நெருக்கமாக இருக்க வேண்டும். அவருடைய பிரசன்னத்தில் நிரம்பியிருக்க கற்றுக்கொள்ள வேண்டும். அனுதினமும் அவருடைய பிரசன்னத்தில் நிரம்பி வாழும்போது, கர்த்தர் நம்மோடு கூட இருக்கிறார் என்ற உணர்வு வரும். தாவீதைப் போல கர்த்தரை நமது வலதுபுறத்தில் வைத்திருக்கும்போது, அவருடைய வழிநடத்துதலையும், பாதுகாப்பையும், மகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்வோம். கர்த்தர் நம்மோடுகூட இருக்கும்போது, அவருக்கு பிரியமில்லாத வழிகளுக்கும், இடங்களுக்கும் விலக்கி நம்மை பாதுகாப்பார். அவருக்கு பிரியமில்லாத காரியங்களை செய்ய மாட்டோம். அவருக்கு பிரியமில்லாத காரியங்களை பார்க்க மாட்டோம். கர்த்தருடைய மனது வேதனைபடும்படியாக நடக்க மாட்டோம். நாமே தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் வழி விலகிச் சென்றுவிட்டு, மற்றவர்களை குற்றஞ்சுமத்த மாட்டோம். இன்ன இன்ன நபர்களால்தான் கர்த்தரை விட்டு விலகிச் சென்றுவிட்டோம் என்று சொல்ல மாட்டோம்.

நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, எப்பொழுதும் ஆண்டவருடைய பிரசன்னத்தில் நிறைந்து வாழலாம் அல்லது தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், நம் மனது விரும்புகிறபடி வாழலாம். பாவ இச்சைகளுக்கு இடங்கொடுத்து பிசாசுக்கு பிரியமாயும் வாழலாம். தேவன் நம்மை அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க நம்மை கட்டாயப்படுத்தமாட்டார். நாமாகவே அவருடைய வழியில் நடக்க

அனுதினமும் அவருடைய பிரசன்னத்தில் நிரம்பி வாழும்போது, கர்த்தர் நம்மோடு கூட இருக்கிறார் என்ற உணர்வு வரும். தாவீதைப் போல கர்த்தரை நமது வலதுபுறத்தில் வைத்திருக்கும்போது, அவருடைய வழிநடத்துதலையும், பாதுகாப்பையும், மகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்வோம். கர்த்தர் நம்மோடுகூட இருக்கும்போது, அவருக்கு பிரியமில்லாத வழிகளுக்கும், இடங்களுக்கும் விலக்கி நம்மை பாதுகாப்பார்.













**க**ர்த்தர் அவர்களுக்கு முன் சென்றார். பகலிலே மேகஸ்தம்பமாக, இரவிலே அக்கினி ஸ்தம்பமாக அவர்களோடுகூட இருந்து வழி நடத்தினார். கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு இருந்து, அவர்களை வழி நடத்திச் சென்றது.

விரும்புகிறார். நாம் நம்முடைய வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறோமா அல்லது சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கிறோமா? என்பது நம்முடைய விருப்பத்தில் தான் இருக்கிறது. தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். பிசாசின் நோக்கமே நம்மை பாவத்தில் விழ வைத்து, வேதனைப்படுத்தி, சமாதானத்தை இழக்கச் செய்து, நரகத்துக்கு கொண்டு செல்வதே. பாவத்தின் பிடியில் சிக்க வைத்து, பாவத்திற்கு அடிமையாய் வாழ வைப்பதே. பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல எவனை விழுங்காலாமென்று சுற்றி சுற்றி வருவான். தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்வேன் என்ற தீர்மானத்தோடு அவருடைய பிரசன்னத்தில் வாழும்போது, சாத்தான் நம்மை அண்ட முடியாது. அவனுடைய கண்ணியில் விழ முடியாது. கர்த்தரை எப்பொழுதும் நமக்கு முன்பாக வைத்திருக்கும்போது, நாம் பாவத்திற்கு இடங்கொடுக்க மாட்டோம். சாத்தானுக்கு பிரியமாய் வாழ மாட்டோம்.

### இஸ்ரவேல் ஜனங்களோடு சென்ற தேவ பிரசன்னம்

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு அழைத்துக் கொண்டு போனார் (யாத்திராகமம் 13:21,22). கர்த்தர் அவர்களுக்கு முன் சென்றார். பகலிலே மேகஸ்தம்பமாக, இரவிலே அக்கினி ஸ்தம்பமாக அவர்களோடுகூட இருந்து வழி நடத்தினார். கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு இருந்து, அவர்களை வழி நடத்திச் சென்றது. பார்வோனும், அவனுடைய சேனைகளும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தபோது, ஜனங்களுக்கு முன்னே செங்கடல் இருந்தது. ஜனங்கள் பயந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்களுக்கு முன்சென்ற மேகஸ்தம்பம் விலகி அவர்களுக்கு பின்னே நின்றது. கர்த்தர் அவர்களுக்குப் பின் சென்று பார்வோனின் சேனைகள் அவர்களை நெருங்காதபடி பாதுகாத்தார். எகிப்தியருக்கு அந்த மேகம் இருட்டாக இருந்தது. இஸ்ரவேலருக்கோ அந்த மேகம் இரவை வெளிச்சமாக்கிற்று (யாத்திராகமம் 14:20). கர்த்தர் அவர்களுக்கு முன் இருந்த செங்கடலை இரண்டாக பிரித்து ஜனங்களுக்கு வழியை உண்டாக்கிக் கொடுத்தார். எகிப்திய சேனைகள் அவர்களுக்கு பின்னே வந்தார்கள். கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவே கவிழ்த்துப் போட்டார்.


இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர் தங்களை பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, பாதுகாத்து, அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்திருந்தும் கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து நன்றி சொல்லாமல், மோசேக்கு எதிராக முறுமுறுத்தார்கள். அதனால் ஜனங்கள் மேல் கர்த்தர் கோபமாகி, நான் உங்கள் நடுவே செல்ல மாட்டேன் என்று கூறினார். மோசே ஜனங்களுக்காக மன்றாடினார். உம்முடைய சமுகம் எங்களோடுகூட வராவிட்டால் நாங்கள் இவ்விடத்தைவிட்டு போக மாட்டோம் என்று ஜனங்களுக்காக கெஞ்சினான். அதற்கு கர்த்தர் என் சமுகம் உனக்கு முன்பாக செல்லும் நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார் (யாத்திராகமம் 33:14). கர்த்தருடைய சமுகம் நம்மோடுகூட இருக்கும்போது, நாம் விசேஷித்தவர்களாக இருப்போம். கர்த்தர் நம்மோடுகூட இருப்பதை மற்றவர்கள் அறிந்துகொள்வார்கள்.

மோசே சீனாய் மலையில் நாற்பது நாட்கள் சென்றபோது, ஜனங்கள் தங்களை வழிநடத்த தெய்வங்களை உண்டுபண்ணும்படி ஆரோனிடம் கேட்டார்கள். ஆரோன் தெய்வ பயமில்லாத ஜனங்களின் வற்புறுத்துதலினால் கன்றுக் குட்டியை வார்ப்பித்தான். ஜனங்கள் கர்த்தர் தங்களுக்கு செய்த அற்புதங்களை மறந்து பொன்கன்றுக் குட்டியை வணங்கி, தேவனுடைய கட்டளையை மீறி, அவருடைய வழியை விட்டு விலகி, தவறான நடத்தைகளில் ஈடுபட்டு ஒழுக்கக்கேடாக நடந்தார்கள். ஜனங்களை கர்த்தரண்டை வழிநடத்த வேண்டியவன், அவர்களை திருப்திபடுத்த கர்த்தருடைய கட்டளைக்கு எதிராக செயல்பட்டான். ஜனங்களை கர்த்தரண்டை நடத்த வேண்டிய ஊழியக்காரர்கள், பின்மாற்றமடைந்து, அவருக்கு மகிமைக் குறைச்சல் உண்டாக்குகிறார்கள். கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், அவரை புறக்கணிக்கிறார்கள். தாங்கள் செய்வது தவறு என்று அறிந்திருந்தும், துணிகரமாய் விருப்பத்தோடு செய்கிறார்கள். இச்சைகளுக்கு இடங்கொடுத்து, பாவம் செய்ய கவர்ந்து இழுக்கப்படுகிறார்கள். இதை எல்லா மனுஷனுக்கும் உள்ள பெலவீனம் என்று புறஜாதிகளைப்போல பேசி தங்களைத் தாங்களே திருப்திபடுத்திக்கொள்கிறார்கள். அவர்கள் தேவசமுகத்தில் இருந்து ஜெபிக்காமல் இருப்பதால் தேவனை விட்டு விலகி விழுந்து போகிறார்கள்.

அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள். கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள். அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள் (தீத்து 1:16). அநேகர் விசுவாசிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்கிறார்கள். தேவனை அறிந்திருக்கிறோமென்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் செயல்களைப் பார்த்தால் தேவனை சரியாக அறிந்து கொள்ளவில்லை என்பது புரிந்து விடும். அனுதின வாழ்க்கையில் அவர்கள் நடக்கையில், செயல்கள், பேச்சுக்கள், சிந்தனைகள் எல்லாம் பாவம் நிறைந்ததாய் இருக்கும். முக்கியமாக அவர்களது எண்ணங்கள் பாவம் நிறைந்ததாய், மனசாட்சி குற்றமுள்ளதாய் இருக்கும். அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்கள், கீழ்ப்படியாதவர்கள்; எந்த நன்மையும் அவர்களால் செய்ய இயலாது. அருவருக்கப்படத்தக்கவர்கள் என்பது விக்கிரக ஆராதனை செய்பவர்களையும், அவர்களது இழி நடக்கைகளையும் குறிப்பிடுகிறது. தூய்மையில்லாமல், அசுத்தத்திலும், இழிவான நடக்கையிலும் வாழ்பவர்களே அருவருக்கப்படத்தக்கவர்கள். கீழ்ப்படியாதவர்கள் என்பது, கீழ்ப்படியும்படி தேவ சத்தம் கேட்க மனமின்றி கடின இருதயமும், இருண்ட மனசாட்சியும் உள்ளவர்களைக் குறிப்பிடுகிறது. எந்த நற்கிரியையும்



நம்முடைய வாழ்க்கையிலும் சோதனைகள் வரும்போது, பாவத்திற்கு இடங்கொடாமல், யோசேப்பைப் போல தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யக்கூடாது என்று நாம் உறுதியாக தீர்மானம் செய்துகொள்ள வேண்டும். இந்த நோக்கம் நம்மில் உறுதியாய் இருந்தால், நாம் பாவத்தில் விழமாட்டோம்.





செய்ய ஆகாதவர்கள் தேவனுக்கும் மனுஷனுக்கும் பயனற்றவர்களைக் குறிப்பிடுகிறது.

அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது (ரோமர் 1:21). தேவனைப் பற்றி அறிந்திருந்தும் அவருக்குரிய கனத்தைக் கொடுக்காமல் அவருக்கு நன்றி சொல்லாமல், தேவனுக்கு பிரியமில்லாத வீண் சிந்தனைகளினால் நிறைந்திருப்பார்கள். கர்த்தரைவிட்டு விலகிச் செல்லும்போதும், அவருக்குப் பிரியமில்லாத காரியங்களை மறைமுகமாகச் செய்யும்போதும், அவருடைய இடத்தில் வேறு எந்த மனிதர்களையோ, மற்ற காரியங்களையோ வைத்திருந்தால் அவைகள் தேவனை நேசிக்க விடாமல் நம்மை குருடராக்கிவிடும். கர்த்தருக்கு மேலாக நாம் எதை வைத்திருந்தாலும், கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்க முடியாமல் நமக்கு தடையாகி விடும். தேவன் நம்மை ஆசீர்வதிக்கவே விரும்புகிறார். தேவன் வெறுக்கிறவைகளை வெறுக்கிறவர்களாகவும், தேவன் அருவருக்கும் காரியங்களைச் செய்யாமல், கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

பாவத்திற்கு அடிமைப்பட்டவரும், தான் செய்த பாவத்திற்கு மனம் வருந்தாதவர்களுமே பாவத்தை மீண்டும் மீண்டும் செய்வார்கள். நாம் பாவம் செய்ய பாவத்திற்கு அடிமைகளல்ல. நாம் பாவத்திற்கு அடிமைகளாய் இராமல் தேவனுக்கு அடிமையாய் இருப்போம். ஒரே நேரத்தில் பாவத்திலும் வாழ்ந்து, கிறிஸ்துவையும் பிரியப்படுத்த முடியாது. தேவனிடத்தில் மன்னிப்பை பெற்றுக்கொண்டு மீண்டும் அதே பாவத்தை தொடர்ந்து செய்யக்கூடாது. பாவத்தை வெறுக்க வேண்டும். இயேசு கிறிஸ்து, நாம் அவரைப்போல பரிசுத்தமாக வாழ விரும்புகிறார். அவருடைய இரத்தத்தை சிந்தி, நம்முடைய பாவங்களை கழுவி சுத்திகரித்து பரிசுத்தப்படுத்துகிறார். மீண்டும் அதே பாவத்தை செய்து அவரை வேதனைப்படுத்தாதிருப்போம். இயேசு கிறிஸ்துவைப் போல் பரிசுத்தமாய் வாழ்வேன் என்கிற தீர்மானத்தோடிருப்போம். இயேசு கிறிஸ்துவின் முழுமையான பரிசுத்தத்தை அடைய வேண்டும் என்கிற வாஞ்சையையும், அதற்கு தேவையான ஆற்றலையும் கர்த்தர் அளிக்கிறார். அதை ஏற்றுக்கொண்டு நம் சரீரத்தின் அவயவங்களை பரிசுத்தத்திற்காக, நீதியின் அடிமைகளாக அர்ப்பணிக்க வேண்டும்.

கர்த்தரைப்பற்றி அறிந்திருப்பதை விலக்கி வைத்து விடும்போது, விக்கிரக ஆராதனை தொடங்குகிறது. தன்னை உண்டாக்கினவரை நோக்கிப் பார்க்காமல், கர்த்தர் எப்பொழுதும் தன் வலதுபாரிசத்தில் இருக்கிறார் என்கிற உணர்வில்லாமல் இருப்பவர்கள் தங்களையே பெரிதாக பார்ப்பார்கள். சுயநலமுள்ளவர்களாக தங்களது சுயதிட்டங்களை நிறைவேற்றுவதிலேயே குறியாயிருப்பார்கள். கர்த்தரைவிட அவர்களுக்கே முதலிடம் கொடுப்பார்கள். ஆவியின் கனியில்லாதவர்களாய் இருப்பார்கள். விபச்சாரத்திலும், பேராசையிலும், பொறாமையிலும், ஏமாற்றுவதிலும் நிறைந்திருப்பார்கள். பிறரை வெறுக்கிறவர்களாய், கொலைகாரர்களாய், சண்டை போடுகிறவர்களாய், கெட்ட எண்ணங்களை உடையவர்களாய், வேண்டுமென்றே மற்றவர்களுடைய மனதை புண்படுத்துகிறவர்களாய் இருப்பார்கள். முதலில் அவர்கள் கர்த்தரை தங்கள் வாழ்க்கையை விட்டு விலக்குவார்கள். கொஞ்சம் கொஞ்சமாக கர்த்தரை விட்டு விலகுவார்கள். மற்றவர்களையும் வெறுக்க வைப்பார்கள்.



### யோசேப்புடன் கர்த்தர்

கர்த்தர் யோசேப்போடே இருந்தார். அவன் காரியசித்தியுள்ளவனானான் (ஆதியாகமம் 39:2). கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு, யோசப்பினிடத்தில் தயவு வைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான். அவனைத் தன் வீட்டுக்கும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணைக்காரன் ஆக்கியது முதற்கொண்டு, கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும், வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது. ஆகையால், அவன் தனக்கு உண்டானதை எல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்புக்கொடுத்துவிட்டு, தான் புசிக்கிற போஜனம் தவிர தன்னிடத்திலிருந்த மற்றொன்றைக் குறித்தும் விசாரியாதிருந்தான் (ஆதியாகமம் 39:3-6). யோசேப்பு, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, உண்மையாயிருந்ததால், கர்த்தர், யோசேப்பை ஆசீர்வதிக்கிறார். யோசேப்போடே தாம் இருப்பதை யோசேப்பினுடைய எஜமானன் போத்திப்பாருக்குக் காண்பிக்கிறார். யோசேப்பை எகிப்து தேசத்திற்கே அதிபதியாக உயர்த்துகிறார். போத்திபாரின் மனைவி பாவம் செய்ய அழைத்தபோது, தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்வது எப்படி என்று சொல்லி, அந்த இடத்தை விட்டே ஓடிப் போகிறார் யோசேப்பு (ஆதியாகமம் 39:12). யோசேப்பு தேவனுக்கு உண்மையாய் இருந்தபடியினாலும், தன் எஜமானாகிய போத்திபாருக்கு துரோகம் செய்யக்கூடாது என்பதாலும், தனக்கு நேரிட்ட சோதனையை தொடர்ந்து எதிர்த்து மேற்கொண்டு வெற்றி பெற்றார். யோசேப்பு தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கவும், பாவத்திற்கு அடிமையாகாதிருக்கவும் தன் மனதில் உறுதியான தீர்மானம் செய்திருந்தார். நம்முடைய வாழ்க்கையிலும் சோதனைகள் வரும்போது, பாவத்திற்கு இடங்கொடாமல், யோசேப்பைப் போல தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யக்கூடாது என்று நாம் உறுதியாக தீர்மானம் செய்துகொள்ள வேண்டும். இந்த நோக்கம் நம்மில் உறுதியாய் இருந்தால், நாம் பாவத்தில் விழமாட்டோம். பாவம் செய்ய மற்றவர்களுடன் ஒத்துப்போக மாட்டோம். தேவனுடைய கட்டளையை மீறி எதையும் செய்ய முன்வராமல், தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்போம்.

அநேக கிறிஸ்தவ தலைவர்கள் விபச்சார பாவத்தில் விழுந்து பின்மாற்றத்துக்கு உள்ளாகிறார்கள். பெருமை உள்ளவர்களாய் மாறுகிறார்கள். கர்த்தருக்கு பதில் தங்களை உயர்த்துகிறார்கள். தங்கள் இருதயத்திலுள்ள இச்சையை நிறைவேற்றுகிறார்கள். தேவனுடைய





கர்த்தருக்கு பிரியமான வழியில் நடந்தால் நம்மோடும் கூட கர்த்தர் இருப்பார். யோசேப்பு கர்த்தரை கனப்படுத்தியதால், கர்த்தரும் அவனைக் கனப்படுத்தினார். கர்த்தருக்கு பயந்து, தங்களுடைய சுயபுத்தியின் மேல் சாயாமல், தங்கள் முழுஇருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, தங்கள் வழிகளெல்லாம் அவரை நினைத்துக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் அவர்களுடைய பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்

சத்தியத்தை பின்பற்றாமல், வழிவிலகி செல்கிறார்கள். விபச்சாரக்காரனாவது, அசுத்தனாவது, பொருளாசைக்காரனாவது... கிறிஸ்துவின் இராஜ்ஜியத்திலே பங்கடைவதில்லை (எபேசியர் 5:5). விசுவாசிகள், கிறிஸ்தவ தலைவர்கள், ஊழியர்கள், ஆபாசமான திரைப்படங்களையோ, ஆபாச காட்சிகளைக் கொண்ட படங்களையோ, புத்தகங்களையோ, இணையதளங்களில் சென்று ஆபாசக் காட்சிகளையோ பார்க்காதபடி தங்களை காத்துக்கொள்ள வேண்டும்.

யோசேப்பு தன் தகப்பன் வீட்டில் இருந்தபோதும், சிறைச்சாலையில் இருந்தபோதும், போத்திபார் வீட்டில் இருந்தபோதும், எகிப்து தேசத்திற்கே அதிகாரியாக இருந்த போதும் கர்த்தர் அவனோடே கூட இருந்தார். நாமும் கர்த்தருக்கு பிரியமான வழியில் நடந்தால் நம்மோடும் கூட கர்த்தர் இருப்பார். யோசேப்பு கர்த்தரை கனப்படுத்தியதால், கர்த்தரும் அவனைக் கனப்படுத்தினார். கர்த்தருக்கு பயந்து, தங்களுடைய சுயபுத்தியின் மேல் சாயாமல், தங்கள் முழுஇருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, தங்கள் வழிகளெல்லாம் அவரை நினைத்துக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் அவர்களுடைய பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் (நீதிமொழிகள்3:5-7).

## தாவீதுடன் கர்த்தர்

தாவீது தன் சிறுவயதிலிருந்தே தேவனை அதிகமாய் நேசித்தான். தேவனைப் பாடி துதிக்கிறவனாய் இருந்தான். பாடல்களை இயற்றுகிறவனாய், இசைக் கருவிகளை வாசித்து தேவனை முழு இருதயத்தோடு தொழுது கொண்டான். தாவீது பராக்கிரமசாலியாய், யுத்த வீரனாய், காரியசமர்த்தனாய் இருந்தான். கர்த்தர் அவனோடு கூட இருந்தார். தாவீது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, சிங்கத்தையும், கரடியையும் கொன்று போட்டான். கோலியாத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தினாலே கொன்று போட்டான். கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் இருந்தார் (1 சாமுவேல் 16:13). கர்த்தர் தாவீதோடே கூட இருக்கிறார் என்றும், தன்னை விட்டு விலகிப் போனார் என்றும் சவுல் கண்டு, தாவீதுக்குப் பயந்திருந்தான். தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்; கர்த்தர் அவனோடே கூட இருந்தார். அவன் மகாபுத்திமானாய் நடக்கிறதைச் சவுல் கண்டு, அவனுக்குப் பயந்திருந்தான் (1 சாமுவேல் 18:14,15). நாமும் தாவீதை போல கர்த்தரை அதிகமாய் நேசிப்போம். அவரை முழுஇருதயத்தோடு தேடுவோம். அவரோடு உள்ள உறவில் சரியாக இருக்கும்போது, கர்த்தர் நம்மோடு கூட இருப்பார். நம் வாழ்க்கை வெற்றியுள்ளதாக, செழிப்புள்ளதாக இருக்கும்.

தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடே கூட இருந்தார் (2 சாமுவேல் 5:10). கர்த்தர் தாவீதை ராஜாவாக உயர்த்தினார். அவன் கர்த்தரை நேசித்து, முழுமனதோடு பின்பற்றியதால் கர்த்தர் அவனோடுகூட இருந்தார். கர்த்தர் தன்னை இஸ்ரவேலின் ராஜாவாகத் திடப்படுத்தி, தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை உயர்த்தினார் என்று தாவீது கண்டறிந்தபோது, இன்னும் அதிகமான மறுமனையாட்டிகளையும், ஸ்திரீகளையும் கொண்டான் (2 சாமுவேல் 5:12,13). இது தாவீதின் நடத்தையில் உள்ள பலவீனத்தை வெளிப்படுத்துகிறது. அவனுக்கு பெண்கள்மேல் அதிகமான ஆசை இருந்தது. தாவீது தன்னுடைய மாம்ச இச்சையை கட்டுப்படுத்த முடியாமல் அதில் தோல்வியுற்றதால், இந்தப் பலவீனம் அவனை கர்த்தருடைய கட்டளையை மீறச் செய்தது. ராஜாவின் இருதயம் பின்வாங்கிப் போகாதபடி அவன் அநேகம் ஸ்திரீகளை வைத்திருக்க வேண்டாம் என்று உபாகமம் 17:17-ல் கர்த்தர் கட்ளையிட்டிருந்தார். தாவீதுக்கு பெண்கள் மேல் இருந்த இச்சை, பெரிய பாவத்துக்கு வழிவகுத்தது. அவனுக்கும், அவனுடைய குடும்பத்துக்கும் மிகுந்த துக்கத்தையும், துன்பத்தையும் கொண்டு வந்தது (2 சாமுவேல் 13-18 அதிகாரங்கள்). தாவீதின் வாழ்க்கையின் முடிவு வரை துன்பங்களையும், நியாயத்தீர்ப்பையும் கர்த்தர் அனுப்பினார்.

தாவீது போருக்கு செல்லாமல் வீட்டில் இருந்தான். ஸ்நானம் பண்ணிக்கொண்டிருந்த பெண்ணைப் பார்த்தவுடன் இச்சை வந்தது. பார்வையில்தான் இச்சை ஆரம்பித்தது. பின் அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். இச்சையை மேற்கொள்ள முடியாமல், உரியாவின் மனைவி என்று அறிந்திருந்தும் பாவத்தில், விபச்சாரத்தில் விழுந்தான். பாவத்தை மறைக்க உரியாவை கொலை செய்தான். உரியாவின் மனைவியை தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். தாவீது செய்த இந்த பாவம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது (2 சாமுவேல் 11:27). தாவீது கர்த்தருடைய கட்டளைகளை மீறினான். கர்த்தரை அசட்டை பண்ணினான். பாவ உணர்வில்லாமல் இருந்தான். கர்த்தர் தீர்க்கதரிசியாகிய நாத்தான் மூலம் பேசினார். நீ என்னை அசட்டை பண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டபடியால், பட்டயம் என்றென்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும் என்று கூறினார்.

தாமிது இஸ்ரவேலரின் தலைவனாக இருந்தான் (2 சாமுவேல் 5:2). இஸ்ரவேலரில் நீதியையும், நியாயத்தையும் நிலைநிறுத்த வேண்டியவன் (2 சாமுவேல் 8:15) கர்த்தருடைய கட்டளைகளை மீறினான். விபச்சாரம் செய்தான், பாவத்தை மறைக்க முயன்றான். கொலை செய்தான். பிறனுடைய மனைவியை இச்சித்தான். அன்பில்லாமல், இரக்கமில்லாமல் நடந்து கொண்டான். பிறனுடைய மனைவியை தன்னுடைய மனைவியாக்கிக் கொண்டான். கர்த்தரோடு நெருக்கமாய் இருந்து இச்சையடக்கம் இல்லாமல் பாவத்தில் விழுந்தான். கர்த்தர் தன் பாவத்தை உணர்த்தியபோது மனந்திரும்பினான்..

பிரியமானவர்களே, மேற்கண்ட பாவங்கள் ஏதேனும் நம்மிடம் இருந்தால் இன்றே




ஜெப தேவைக்கும்
தேவ ஆலோசனைக்கும்

வாழ்வில் போராட்டமா?, தேவனுடைய சத்தத்தை கேட்க முடியவில்லையா?, எதிர்காலத்தைக் குறித்த பயமா?, உங்கள் ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும் தயக்கமின்றி தொடர்பு கொள்ளவும். சகோதரரை நேரில் சந்திக்க விரும்புகிறவர்கள் கீழ்கண்ட தொலைபேசி எண்களில் உறுதிப்படுத்திக் கொண்டு வரவும்.

HELP LINE
+91-44-2235 3500
+91-9940667881
nijakennedy@yahoo.com
WWW.KENNEDYMINISTRIES.ORG

மனந்திரும்புவோம். கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் துரோகம் பண்ணாமல், உண்மையாய் இருப்போம். கர்த்தர் வெறுக்கும் அருவருப்பான செய்கைகளை விட்டு விடுவோம். ஸ்திரீயுடனே விபச்சாரம் செய்கிறவன் மதிகெட்டவன், அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவைக் கெடுத்துப் போடுகிறான். வாதையையும், இலச்சையையும் அடைவான். அவன் நிந்தை ஒழியாது (நீதிமொழிகள் 6:31,32). விபச்சாரமாகிய பாவத்தை செய்கிறவன் தன்னையே அழித்துக் கொள்கிறான். அவனது அழிவுக்கு அவனே காரணம். அவன் வாழ்வில் குழப்பத்தையும், அவமானத்தையும் அடைவான். தாவீது தனது செயல்களால் தேவனை அற்பமாக மதித்து, அன்பு செலுத்தவும், பக்தி காட்டவும் தகுதியற்றவர் என்று ஆக்கி விட்டான். தேவனையும், அவருடைய கட்டளையையும் அசட்டை பண்ணினதால் கர்த்தருடைய நியாயத் தீர்ப்பு வந்தது.

விபச்சாரம் செய்யும் தேவ ஊழியர்கள், தாங்கள் எந்த அளவு கர்த்தரையும், அவருடைய வார்த்தைகளையும் மதிக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய வார்த்தையை மதிக்காமல் உதாசீனப்படுத்துகிறார்கள். இன்றைக்கும் அநேகர் கர்த்தரால் தனக்கு கொடுக்கப்பட்ட மனைவியை விரும்பாமல், மற்ற ஸ்திரீகளை இச்சையோடு பார்க்கிறார்கள். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று (மத்தேயு 5:28). ஒருவனுடைய மனதில் தோன்றுகிற தவறான, ஒழுக்கக்கேடான எண்ணங்கள், முறைகேடான ஆசைகள் அதற்குரிய சந்தர்ப்பமும், சூழ்நிலையும் சாதகமாக கிடைத்தவுடன் அதை நிறைவேற்ற விரும்பும். அவனுடைய உள்ளத்தில் தோன்றும் முறைகேடான உறவு, இன்பத்துக்கேதுவான ஆசைகளை எதிர்த்து, மேற்கொள்ளாமல், அதற்கு இடங்கொடுத்தால் அது பாவமாகும். பாலியத்திற்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் அடையும்படி நாடு (2 தீமோத்தேயு 2:22). மாம்ச சிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமுமாம் (ரோமர் 8:6). மாம்ச சிந்தையோ தேவனுக்கு விரோதமான பகை. மாம்ச சிந்தை உடையவன் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய மறுக்கிறான். மாம்சம் விரும்பும் பாவ இச்சைகளை திருப்திப்படுத்த இடம் கொடுக்கிறான். ஆவியின் சிந்தை என்பது பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்கு கீழ்ப்படிவதும், தேவனுடைய காரியங்களில் கவனத்தை திருப்புவதுமாகும். நாம் வேத தியானத்திலும், கர்த்தரோடு உள்ள ஐக்கியத்திலும் நிலைத்திருந்தால் பாவத்தில் விழாமல் வெற்றியுள்ள வாழ்க்கை வாழலாம்.

கர்த்தரை எப்போதும் நமக்கு முன்பாக நிறுத்தி வைக்கும்போது அவருக்கு பிரியமில்லாத சிந்தனைகளை சிந்திக்க மாட்டோம். கிறிஸ்து இயேசுவிலிருக்கிற சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது (பிலிப்பியர் 2:5). கிறிஸ்துவின் சிந்தையே நமது சிந்தையாய் இருக்க வேண்டும். நமது வார்த்தைகளில், இருதயத்தின் எண்ணங்களில், பார்வையில், செய்கைகளில் கவனமாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொண்டு பாவத்தை மேற்கொள்ளுவோம். ●





# மதுரையில் நடைபெற்ற வல்லமை பயிற்சி முகாம்












சகோ. பால்ராஜ் கென்னடி

# வாழ்க்கையின் கதை

வயது அரை நூற்றாண்டு ஆகிறது. குடியிருக்க சொந்தமாக வீடு இல்லை. எத்தனை வாடகை வீடுகள். வாடகை கொடுப்பதற்காகவே உழைத்த காலங்கள் உண்டு. ஒவ்வொரு மாதமும் வாடகை கொடுக்கும்போதும், வீட்டைக் காலி பண்ணு என்று வீட்டு உரிமையாளர் சொல்லி விடுவாரோ என்ற பயம் இருந்தது உண்மை. வாடகையை அநியாயமாய் உயர்த்தின வீட்டு உரிமையாளரை எதிர்த்து பேச முடியாத சூழ்நிலையை யாரால் மறக்க முடியும். இப்போதே வீட்டைக் காலி பண்ணிக்கொடு என்று சொன்ன முரட்டு வீட்டு உரிமையாளரை யாரால் மறக்க முடியும்.

போராடி ஜெபிக்க பவுல் சொன்னார். எப்போதுமே போராடித்தான் ஜெபிக்கும் சூழ்நிலை. என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக விடேன் என்று யாக்கோபு ஒருமுறை ஜெபித்தார். இப்படித்தான் தினமும் ஜெபிக்கின்றேன்.

எல்லோராலும் புறக்கணிக்கப்பட்ட நிலைமையில் இருக்கின்றேன். மன பாரங்களை பகிர்ந்துகொள்ளக்கூட ஆள் இல்லை. உதவி என்று கேட்கக்கூட என்னருகில் யாரும் கிடையாது.

தகப்பனார், இந்த உலகைக் கடந்து சென்று விட்டார். தாய் எதையும் உணர முடியாத மனநிலைமை. சுயநலமிக்க சகோதர, சகோதரிகள்.

எத்தனையோ புது புது வீடுகளை கர்த்தருக்கென்று பிரதிஷ்டை பண்ணி ஜெபிக்கின்றேன். எனக்கென்று சொந்தமாக வீடு கிடையாது. விசாலமான வீடுகளைப் பார்க்கும்போது எனது மனது ஒடுங்கிப்போகிறது. பிரமாண்டமான வீடுகளைப் பார்க்கும்போது, மனசு சுருங்கிப் போகிறது.

வாடகைக்கே சற்று பெரிதான வீட்டைத் தேடலாமென்று போய் அப்பார்ட்மெண்டின் (அடுக்குமாடி கட்டிடம்) வாட்ச் மேனைப் பார்த்தால், நினைத்துப் பார்க்க முடியாத ஒரு தொகையைச் சொல்லி, உன்னாலெல்லாம் கொடுக்க முடியாது என்று மேலும் கீழும் பார்க்கும்பொழுது, என் உள்ளமெல்லாம் நொறுங்கிப் போகிறது.

புது புது கார்களைப் பார்க்கும்போது, ரசிக்கத்தான் முடிகிறது. நாமும் இதுபோல வாங்க முடியும் என்ற எண்ணம் துளியும் இல்லை.

இப்போதெல்லாம் காரில் போவதுபோல சொப்பனம்கூட வர மாட்டேனென்கிறது. வசதியெல்லாம் தூரமாய் போய் விட்டது.

பணம் இருந்தால் வாழலாம் என்ற சூழ்நிலையில், பணமே இல்லாமல் என்னால் எப்படி வாழ முடியும்?

எளிமையாக வாழ்வதாகச் சொல்கிறார்கள். வசதி இல்லாதவர்கள் அப்படித்தானே வாழ முடியும்.

ஒன்றுக்கு இரண்டாக வாங்குவோர் மத்தியில், ஒன்று வாங்கவே யோசிக்க வேண்டிய நிலைமை.

தனிமை, வாட்டவில்லை. யோசிக்க வைக்கின்றது. ஒரு ஓரமாக நின்று, மழைக்கு ஒதுங்கினது போல ஒதுங்கி நின்று, வாழ்க்கையை யோசித்துப் பார்க்கிறேன்...

ராஜா போல வாழ்ந்த காலம் உண்டு. நினைத்ததெல்லாம் கிடைத்தது, வாய்த்தது. சிறகடித்துப் பறந்த காலம்.

இப்போது அந்தக் காலம் சிறகடித்துப் பறக்கின்றது. நான் கீழே இருந்து அண்ணாந்து பார்க்கின்றேன். அது அந்தக் காலம்.

அப்போது கண்ணீர் விட்டது கிடையாது. மற்றவர் விடும் கண்ணீரையும் கண்டது கிடையாது. இப்போது கண்ணீர் விடுகிறேன். மற்றவரின் கண்ணீர் தண்ணீரைப்போல கொட்டுவதைப் பார்க்கின்றேன். எவ்வளவு வேதனைகள். ஒவ்வொருத்தரின் வாழ்க்கையும் அவர்களை அழ வைக்கின்றது. விதவிதமான மனிதர்கள், விதவிதமான வாழ்க்கைகள், விதவிதமான கண்ணீர்கள்... என்ன வாழ்க்கை இது...

உண்டாக்கினவைகளைப் பார்க்கும்போது, அவைகளை உண்டாக்கினவரை நோக்கிப் பார்க்க வேண்டுமென்று வேதம் கூறுகிறது. என் கண்களை தெய்வத்திற்கு நேராக ஏறெடுக்கிறேன்.

வானம், பூமி, சமுத்திரம், அவைகளில் உள்ள எல்லாம் அவரால் உண்டாக்கப்பட்டவைகள். மனிதனும் கர்த்தரால் உருவாக்கப்பட்டவன்.

ஏன் இத்தனை போராட்டங்கள்? நெருக்கங்கள்? கண்ணீர்கள்? இதோ, வேதத்தை சுட்டி காண்பிக்கிறார். எல்லா கேள்விகளுக்கும் பதில் அதில் உண்டென்கிறார். வேதத்தைப் புரட்டுகிறேன்... முதலாவது தெய்வத்தைப் பற்றி தெரிந்து கொள்கின்றேன். அடுத்து, அவர் உண்டாக்கினவைகளைப் பற்றி அறிந்து கொண்டேன். அதில் என்னைப் பற்றியும் எழுதியிருந்ததைப் பார்த்தேன், படித்தேன், தெரிந்து கொண்டேன்.

**யா**ர் அவரை நோக்கிக் கூப்பிடுகிறார்களோ, அவர்களுக்கு உதவி செய்ய ஆவலோடு காத்திருக்கிறார். அதையெல்லாம் எழுதி வேதமாக நம்முடைய கரத்தில் கொடுத்திருக்கிறார். அதைக் கற்றுக்கொள்ள வாஞ்சிக்கிறார். நமக்குள் இருந்து கற்றுக்கொடுக்க ஆசையாய் காத்திருக்கிறார்.

எனது ஜீவன் அவரது கரத்தில். எனது சுவாசம் அவரது கரத்தில். எனது காலங்கள் அவரது கரத்தில். என்னால் எதுவும் செய்ய முடியாது. எல்லாமே அவரது கரத்தில் இருக்கின்றது. என்னை நடத்துவது அவரே. எனக்கு சுகம், பெலன் தருவது அவரே. என்னைப் பாதுகாப்பது அவரே. என்னை போஷிப்பது, பிழைப்பூட்டுவது அவரே. எல்லாமே இயேசுதான். அவர்தான் வழி, சத்தியம், ஜீவன். அவர் என்னோடு, எனக்குள், என் மீது இருக்கிறார். வேதம் ஒரு கதைப் புத்தகம் இல்லை. அது நிஜம். நிழலல்ல. இயேசு அதில் வார்த்தையாக இருக்கிறார். வார்த்தையாக இருந்து பேசுகிறார். பேசுகிற வார்த்தை.

எல்லாம் நடப்பது தானாக அல்ல. அவரே எல்லாவற்றையும் நடப்பிக்கிறார். அதின் பின்னால் தேவ இரகசியம், தேவ ஞானம் இருக்கின்றது. எல்லாவற்றையும் யோசித்தே செய்கிறார். யோசனையில் பெரியவர். அவரது யோசனைகள் மகா ஆழமானவைகள். அவரது செய்கைகள் யதார்த்தமானவைகள். பொய்யில்லை. சத்தியம்.

சுயாதீனத்தை மனிதனுக்குக் கொடுத்து, சுயமாக நடக்க வைக்கிறார். அவன் சுயமாக நடக்கும்போது, பலவிதமான சூழ்நிலைகள் ஏற்படுகின்றது. அதில் அவரவர் விருப்பப்படி, யோசனைகளின்படி நடக்கும்போது, பல்வேறு நெருக்கங்கள், போராட்டங்கள், கண்ணீர்கள்...

யார் அவரை நோக்கிக் கூப்பிடுகிறார்களோ, அவர்களுக்கு உதவி செய்ய ஆவலோடு காத்திருக்கிறார். அதையெல்லாம் எழுதி வேதமாக நம்முடைய கரத்தில் கொடுத்திருக்கிறார். அதைக் கற்றுக்கொள்ள வாஞ்சிக்கிறார். நமக்குள் இருந்து கற்றுக்கொடுக்க ஆசையாய் காத்திருக்கிறார். இன்றே அவரை, இயேசுவை பெற்றுக் கொள்வோமா...